# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

## ஆண்டு அறிக்கை 2013

**சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**

## ***தொலைநோக்கு***

*“2020ஆம் ஆண்டுக்குள் நிலைத்திருத்தல் தேசிய அபிவிருத்திக்கும், இலங்கை மக்களின் சேமநலனுக்கும் மற்றும் பொருளாதாரத்திற்கும் இலங்கையைச் சுற்றி தீழ்ப்பு அற்ற கடல்சார் சூழலை உருவாக்குதல்”*

## ***செயற்பணி***

*“தற்போதையதும், எதிர்காலத்திற்குமானதுமான சந்ததிகளின் கடல்சார் சுற்றாடலின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்கு பயனுறுதிவாய்ந்த ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்தலினதும், சம்பந்தப்பட்ட சர்வதேச சமவாயங்களினதும் பங்காளரின் ஒருங்கிணைப்பினதும் மற்றும் ஒன்றுதிரட்டலினதும் மற்றும் வேறு மூலவளங்களினதும் அமுலாக்கத்தினதும் ஊடாக இலங்கையின் நீர்ப்பரப்புக்களில் கடல் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும் அவசியமான திறன்களுடனும், தகுதியுடனும், தாபனரீதியான கட்டமைப்பினதும் மற்றும் உட்கட்டமைப்பு வரைச்சட்டத்தினதும் முகவராண்மையொன்றாக இருத்தல்.”*

# பணிப்பாளர் சபை

## தலைவர்

திரு.ரி.என்.விஜேகுணவர்தன (இளைப்பாறிய பிரதி பொலிஸ் மா அதிபர்) (15.05.2013இலிருந்து செயற்படத்தக்கதாக நியமிக்கப்பட்டார்)

## பணிப்பாளர்கள்

| பெயர் | பதவிப்பெயர் | பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனம் | வேறு கருத்துக்கள் |
|---|---|---|---|
| திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க | மேலதிகச் செயலாளர், சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | |
| கொமடோர் என்.பி.ஆட்டியகல | பணிப்பாளர் - செயற்பாடுகள், இலங்கைக் கடற்படை | இலங்கைக் கடற்படைத் தளபதியின் பிரதிநிதி | |
| திருமதி எஸ்.என். மாயாதுன்னே பண்டார | சட்ட ஆலோசகர், வெளி விவகார அமைச்சு | வெளி விவகார அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | |
| திரு.பி.எம்.எஸ்.ஜயதிலக்க | பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம் | நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | |
| திரு.எச்.எம்.பீ.சி.ஹேரத் | மீன்பிடி அமைச்சு | மீன்பிடி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி | |
| திரு.எ.டபிள்யு.செனிவிரத்ன | பணிப்பாளர் நாயகம், வணிக் கப்பற்றுறை திணைக்களம் | பணிப்பாளர் நாயகம், வணிக் கப்பற்றுறை | |
| திரு.மகேஷ் கட்டுலந்த | சட்டத்தரணி | அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் | |
| திரு.ஜே.எ.எ.ரணசிங்க | | அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் | நியமனத் திகதி – 04.07.2013 |
| செல்வி எ.காரியவாசம் | பதில் பொது முகாமையாளர் | | நியமனத் திகதி – 30.04.2013 |

## சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாளர்

தலைவர் - திரு.ரி.என்.விஜேகுணவர்தன (நியமனத் திகதி 15.05.2014)

பதில் பொது முகாமையாளர் - செல்வி எ.காரியவாசம் (LLB, M.Sc.)

முகாமையாளர் - சட்டம் - செல்வி எ.காரியவாசம் (LLB, M.Sc.)

பதில் முகாமையாளர் - செயற்பாடுகள் - திரு.எ.ஜே.எம்.குணசேகர (B.Sc., M.Sc.)

கணக்காளர் - திரு.டி.ஆர்.சி.ஜயவர்தன (B.Com. SP/LICA)

உதவி முகாமையாளர் (செயற்பாடுகள்) - திரு.எ.ஜே.எம்.குணசேகர (B.Sc., M.Sc.)

உதவி முகாமையாளர்கள் (மாகாணம்) - திருமதி ரி.எஸ்.ரணசிங்க (B.Sc.)
- திருமதி ரேணுகா ரணவீர (B.Sc.)
- திரு.எச்.ரி.என்.ஐ.பியதாச (B.Sc., M.Sc.)

உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடுகள்) - திரு.ஆர்.என்.பிரியதர்ஷன (B.Sc.)

உதவி முகாமையாளர் (மனித வளங்கள்) - திருமதி டபிள்யு.எச்.கே.ஹிற்றிபண்டார (B.Sc.)

உள்ளகக் கணக்காய்வாளர் - திருமதி ஆர்.எச்.எச்.பிரேமசந்திர (B.B.A)

உதவி முகாமையாளர் (நிருவாகம்) - திரு.எஸ்.எம்.சி.குமாரகே (B.B.M.G.T.Sp.)

நிருவாக உத்தியோகத்தர் - திருமதி ஜி.பி.நிலான்ஜனி (B.A.Sp.)

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தொடர்பு விபரங்கள்

### தலைமை அலுவலகம்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
758, 2ஆவது மாடி, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி: 011-2687520/011-2690604/011-2690605
∴பக்ஸ்: 011-2687451/011-4615960
ஈ-மெயில்: info@mppa.gov.lk
இணையதளம்: mppa.gov.lk

**தென் மாகாண அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் - காலி மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
04, குளோசன்பேக் வீதி,
மாகலே,காலி.
தொலைபேசி: 091-2233547/071-8214184
∴பக்ஸ்: 091-2233547

**பிராந்திய அலுவலகம் - ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
1/2 , சிங்ககிரி,
பெத்தவல வீதி, ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222372/071-3624651
∴பக்ஸ்: 047-2256372

**பிராந்திய அலுவலகம் - புத்தளம் மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல.23 ஈபேர்ட் சில்வா வத்த,
கொழும்பு வீதி, சிலாபம்
தொலைபேசி: 032-2222865/ 071-88099899
∴பக்ஸ்: 032-2222865

**கிழக்கு மாகாண அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் - திருகோணமலை மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
04, மைல் கல், சீனன்குடா, திருகோணமலை.
தொலைபேசி: 026-2050805/071-8383363
∴பக்ஸ்: 026-2050805

**பிராந்திய அலுவலகம் - மாத்தறை மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல.18 வில்மட் பாலசூரிய மாவத்தை,
நூபே, மாத்தறை.
தொலைபேசி: 041-2234250/ 071-4926849
∴பக்ஸ்: 041-2234250

**பிராந்திய அலுவலகம் - களுத்துறை மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல. 187, கொழும்பு வீதி, பேருவளை.
தொலைபேசி: 034-2298407/071-8100821
∴பக்ஸ்: 034-2298407

**பிராந்திய அலுவலகம் - கம்பஹா மாவட்டம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல. 704/9A, 2ஆவது கருணா,
கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
தொலைபேசி: 031-2228606/718-325678
∴பக்ஸ்: 031-2228606

# தலைவரின் செய்தி

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவராக 17.04.2013இலிருந்து செயற்படத்தக்கதாக நான் கடமைகளை ஏற்றுக்கொண்டேன். 2013ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் செயல் திட்டத்தின் அமுலாக்கமானது பணிப்பாளர் சபையுடனான கூட்டுமுயற்சியுடன் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, பணிப்பாளர் சபையுடனான உசாவுகையுடன் உள்ளகக் கட்டுப்பாடுகளிலும் மற்றும் நிருவாகப் பிரிவிலும் நிலவிய பலவீனங்களை வெற்றிகொள்வது சாத்தியப்பட்டது.

2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரச்சட்டத்தை பிரிவு 51இன் கீழ் வழங்கப்பட்ட 2013இன் இல.01 கடல்சார் சூழல் பாதுகாப்பு கட்டளையை 12.07.2013இலிருந்து செயற்படத்தக்கதாக அமுல்படுத்துவதில் அதிகார சபை வெற்றியீட்டியது.

இக் கட்டளையின் அமுலாக்கத்தின் ஊடாக, கரையோர வலயத்தில் அமைந்துள்ள உணவகங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் போன்றவற்றினால் கடல்சார் சூழலினுள் கழிவுப் பதார்த்தத்தின் ஒழிப்பினை கட்டுப்படுத்துவதும் சாத்தியப்பட்டது. இதேபோல், சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்தவினதும், அவரது அமைச்சுக்கான செயலாளரினதும் ஆதரவின் கீழ் இந்துருவ பீச் ரிசோர்ட்டில் 2015 ஒக்ரோபர் 27இலும், 28இலும் இலங்கையில் முதற்தடவையாக தேசிய சூழல் ஆய்வரங்கை நடத்துவதில் அதிகார சபை சிறிதளவு வெற்றியடைந்தது. கடல்சார் சூழலுடன் இணைந்த மதிப்புமிக்க நூற்கல்வியாளர்கள் ஆய்வரங்கில் பங்கெடுத்தனர். கடல்சார் சூழல், கடல்சார் உயிர்வாழ்கின்றதும், உயிர் வாழாததுமான வளங்கள் மற்றும் கூருணர்விலான கடல்சார் உயிரியல்முறைமைகள் ஆகிய கருப்பொருட்கள் மீது பாரிய எண்ணிக்கையிலான ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆய்வரங்கின் இறுதியை நோக்கி கடல்சார் சூழலைப் பேணுவதற்கான தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்காக பரிந்துரையொன்று செய்யப்பட்டது. இந்நோக்கத்திற்காக கலாநிதிகள் மற்றும் பேராசிரியர்கள் போன்ற நூற்கல்வியாளர்களைக் கொண்ட குழாமொன்று அமைக்கப்பட்டு, கொள்கையொன்று வரையப்பட்டது. அதேவேளை, 2013ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகவிருந்த பதவிநிலைகளுக்கு 18 அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கு அதிகார சபையினால் இயலக்கூடியதாக இருந்ததுடன், இதன் மூலம் அதிகார சபையின் பணிகளைச் செயற்திறனாக நிறைவேற்றுவது இயலக்கூடியதாகவிருந்தது.

அதிகார சபையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் பிராந்திய அலுவலகங்கள், தொழில்நுட்பப் பிரிவு மற்றும் ஆய்வுகூடம் ஆகியவற்றுக்கு அவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு அதிகார சபையினால் இயலக்கூடியதாக இருந்தது.

இறுதியாக, 2013ஆம் ஆண்டில் 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களை சாதிப்பதில் அர்ப்பணிப்புடனும், நிறைந்த ஊக்கத்துடனும் தமது கடமைகளை நிறைவேற்றியமைக்காக பணிப்பாளர் சபைக்கும், பதில் பொது முகாமையாளருக்கும் மற்றும் சகல அலுவலர்களுக்கும் நன்றிகூற நான் விரும்புகின்றேன்.

ரி.என்.விஜேகுணவர்தன
தலைவர்

# உள்ளடக்கங்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | | பின்னணி | |
| | 1.1 | அறிமுகம் | 8 |
| | 1.2 | அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 8-9 |
| 2. | | தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு | 10-21 |
| 3. | | நிருவாக, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் சட்டப் பிரிவுகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் | |
| | 3.1 | நிருவாகப் பிரிவு | 22 |
| | 3.2 | மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 23-27 |
| | 3.3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 28 |
| | 3.4 | சட்டப் பிரிவு | 28-29 |
| | 3.5 | நிதிப் பிரிவு | 29-32 |
| 4. | | அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள் | |
| | 4.1 | கணக்கீட்டுக் கொள்கைகள் | 33-35 |
| | 4.2 | 2013 டிசம்பர் 31இல் உளள்வாறு நிதிசார் நிலையின் கூற்று | 36 |
| | 4.3 | 31.12.2013இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் தொழிற்பாடுகளின் கூற்று | 37 |
| | 4.4 | 31.12.2013இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று | 38 |
| | 4.5 | 2013ஆம் ஆண்டுக்கு பணப்பாய்வு கூற்று | 39 |
| | 4.6 | நிதிசார் கூற்றுக்களின் மீதான குறிப்புகள் | 40-51 |
| 5. | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 52 |

# 1.பின்னணி

## 1.1 அறிமுகம்

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான நிலையொன்றில் இலங்கை அமைந்துள்ளது. சர்வதேச ஒழுங்குவிதிகளின் பிரகாரம், இலங்கையின் நிலத் திணிவின் அளவின் எட்டுத் தடவைகள் சமுத்திரத்தில் உள்ள பகுதியொன்றின் வளங்களை இலங்கை அறுவடை செய்வதற்கு உரித்தினைக் கொண்டுள்ளது. சமுத்திரத்தின் இப் பகுதியில், கிழக்கத்திய மற்றும் ஒட்சியேற்ற சர்வதேச கப்பலோட்ட வழிகள் அமைந்துள்ளன. இலங்கையின் ஆட்புல நீர்கள் பெருமளவு இயற்கையான வளங்களுடன் செழுமை மிக்கதாக இருப்பதுடன், இவ்வளங்களின் அறுவடையினதும், கப்பலோட்டத்தினதும், நிலத்தின் மீது மனிதச் செயற்பாடுகளினதும் காரணமாக சமுத்திரம் தீழ்ப்படைகின்றது.

இதன் பிரகாரம், கடல்சார் சூழல் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கும், தடுப்பதற்கும் அவசியமான நடவடிக்கையை எடுப்பதற்காக 1981இன் இல.59 கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகார சபை அமைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கு பிரயோகிக்கத்தக்க கடல்சார் தீழ்ப்பு மீது சர்வதேச சமவாயங்களை வினைப்படுத்தும் நோக்கத்திற்காக அதிகார சபையில் உடமையாக்கப்பட்டுள்ள சட்டபூர்வ அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்காகவும், கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்காகவும், குறைந்தபட்சமாக்குவதற்காகவும் முன்னர் நிலவிய கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தை பதிலீடு செய்வதற்காக ‘2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச்சட்டம்’ என குறிப்பிடப்பட்டுள்ள புதிய அதிகாரச் சட்டம் இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்றிலிருந்து செயற்படுகின்றது. இதன் பிரகாரம் புதிய அதிகாரச்சட்டத்தினால் ‘கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகார சபை’ என அதிகார சபையின் பெயர் மாற்றப்பட்டது.

கடற்படை முனையொன்றாக இலங்கையின் அபிவிருத்தியை “**மகிந்த சிந்தனை**” வலியுறுத்துகின்றது. இப் புதிய தொலை நோக்கின் அங்கமொன்றாக புதிய துறைமுகங்கள் கட்டப்படுவதுடன், பழைய துறைமுகங்கள் மேலும் திருத்தப்படுகின்றன. மேலதிகமாக, சமுத்திரத்தின் வளங்களைப் பெறுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைக்கப்படுகின்றன. இந்த அபிவிரு த்தித் திட்டங்களின் காரணமாக இடம்பெறக்கூடிய ஏதாவது தீழ்ப்பைத் தடுப்பதற்காகவும் அத்துடன் அவற்றின் நிலைத்திருக்கும்தன்மையை உறுதிப்படுத்து வதற்காகவும் க.சூ.பா. அதிகார சபை கோரப்பட்டுள்ளது.

கடல்சார் சூழலின் தீழ்ப்பினைக் குறைந்த பட்சமாக்குவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் தடுப்பதற்கும் பொறுப்பான முகவராண்மையாக பன்மைத்தன்மையிலான திட்டங்களில் க.சூ.பா.அதிகார சபை ஈடுபட்டு ள்ளது.

## 1.2 அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

(1) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை பயனுறுதியாகவும், திறமையாகவும் நிருவகித்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(2) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயங்களில் அதன் கரை மீது கப்பல்சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கை யிலும் இருந்து எழும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்குமான செயற்திட்டமொன்றை வகுத்தலும், நிறைவேற்றுதலும்.

(3) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரை முனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல் சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப் படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும்

முகவராண்மைகளுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(4) இலங்கையின் கடற்கரையையும் மற்றும் அதன் கரையோர வலயத்தையும், அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள இலங்கையின் அல்லது ஏதேனும் வேறு கரைசார்ந்த வலயத்தின் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் நிருவகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பேணிக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(5) ஏதேனும் எண்ணெய்க்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும், பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல்.

(6) இலங்கை அரசாங்கம் ஏற்றங்கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கியுள்ள அல்லது அங்கீகரித்துள்ள அல்லது ஏற்றங்கீகரிக்கக்கூடிய, ஏற்றுக்கொள்ளக் கூடிய, இணங்கக்கூடிய அல்லது அங்கீகரிக்கக்கூடிய கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும், இயைபான பின்னேடுகளையும் கடைப்பிடிப்பதனை விதந்துரைத்தல்.

(7) தேசிய எண்ணெய் தீழ்ப்பு எதிர்பாரா நிகழ்வுத் திட்டத்தை வகுத்தமைத்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(8) பெற்றோலியம் அல்லது அது தொடர்பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற்கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களினதும், சேவைத் துணை ஒப்பந்தக்காரர்களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும், ஒழுங்குபடுத்துதலும், கண்காணித்தலும்.

(9) கடல்சார் சூழலைப் பேணிக் காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்.

(10) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

(11) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்கள் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப் படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல்சார்ந்த வலயத்தை ஏதாவது கப்பல் அடிப்படையிலான அல்லது கடல் அடிப்படையிலான கடல்சார்ந்த தொடர்பிலான நடவடிக்கையினால் பயனுறுதியுடன் பாதுகாத்தலும், பேணிக் காப்பாற்றுதலும்.

(12) ஏதாவது கப்பல் அடிப்படையிலான நடவடிக்கைகளிலிருந்து அல்லது கரை அடிப்படையிலான நடவடிக்கையிலிருந்து எழுகின்ற ஏதாவது தீழ்ப்பு தொடர்பில் ஆய்வுகளையும், விசாரணைகளையும் நடத்துதலும், சட்ட நடவடிக்கையை ஆரம்பித்தலும்.

(13) தீழ்ப்பின் தடுத்தல் நோக்கத்திற்காக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்களின் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப் படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல் சார்ந்த வலயத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணெயின் சகல கடல் போக்குவரத்தையும், எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல்.

# 2. செயற்பாடுகளின் மதிப்பாய்வு

### 1. தேசிய எண்ணெய் சிந்துதல் அவசர காலத் திட்டம்

### 1.1 எண்ணெய் சிந்துதல்களில் முதலாவது பதிலிறுப்பாளர்களுக்கான நான்கு நாள் பயிற்சித் திட்டம்

கப்பற்றுறை மற்றும் துறைமுகங்கள் துறையின் துரித அபிவிருத்தியுடன் இலங்கையின் துறைமுகங்களில் வந்திறங்கும் கப்பல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பின் காரணமாக சடுதியான எண்ணெய் சிந்துதல்கள் இடம்பெறுதலினதும், சடுதியான எண்ணெய் சிந்துதல்களினால் கடல்சார் சூழலும் இணைந்த கைத்தொழில்களும் பாதிக்கப்படுவதினதும் நிகழ்தகவுகள் இடம்பெறுகின்றன.

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தை இந்த அதிகார சபை தயாரித்துள்ளது. எனவே, அவசரகால நிலைகளில் திட்டத்தை அமுலாக்குவதில் சம்பந்தப்படுகின்ற ஆளணியினரை பயிற்றுவிப்பது முக்கியமானதாகும்.

இந்நோக்கத்திற்காக 2013ஆம் ஆண்டில் 04 நாள் செயலமர்வொன்றை அதிகார சபை நடத்தியது. ராஜகிரியவில் உள்ள வங்கியாடல் நிறுவனத்தில் செயலமர்வு நடத்தப்பட்டதுடன், இதில் பலதரப்பட்ட முகவராண்மைகளிலிருந்து 35 பிரதிநிதிகள் பங்கெடுத்தனர். இச் செயலமர்வில் எண்ணெய் சிந்துதல்களின் கட்டுப்பாடு மீது கோட்பாட்டியலிலானதும், செயல்முறையிலானதுமான பயிற்சி பங்கெடுப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

### 1.2 விழிப்பியல் செயற்றிட்டங்கள்

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தின் மீது அரசாங்க அலுவலர்கள், அரசாங்கம் சாராத அலுவலர்கள், வியாபார சமூகத்தினர் மற்றும் பகுதியிலுள்ள சிவிலியன் மக்கள் மற்றும் இராணுவத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் மத்தியில் விழிப்பியலை உருவாக்குவதற்காக மாவட்ட அலுவலக மற்றும் பிராந்திய அலுவலக மட்டத்தில் பெருமளவு கூட்டங்கள் நடைபெற்றன. சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றுக்காக உரிய இடத்தில் இருக்கவேண்டிய தயாரிப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் சார்ந்துள்ள பொறுப்புக்கள் ஆகியனவே இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன.

ஹபரதுவ, கற்பிட்டி, கம்பஹா, நீர்கொழும்பு, வத்தளை, களுத்துறை வடக்கு, பெந்தோட்டை, பலப்பிட்டிய, காலி, அம்பாலாங்கொட, ஹிக்கடுவ, மாத்தறை, வெலிகம, தொந்தர, திக்வெல, திருக்கோவில், குச்சவெளி மற்றும் கிண்ணியா பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்கள் ஆகியன நடைமுறையில் சம்பந்தப்பட்டிருந்தன.





## 1.3 நிகழ்வு கட்டுப்பாட்டு முறைமை மீது நிகழ்வு முகாமைத்துவக் குழாமை பயிற்று வித்தல்

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தை அமுலாக்குவதில் நிகழ்வுக் கட்டுப்பாட்டு முறைமையைப் பயன்படுத்து வதற்கு திட்டங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், இந் நோக்கத்திற்காக நிகழ்வு முகாமைத்துவக் குழாம்கள் நியமிக்கப்பட்டுள்ளன. சடுதியான எண்ணெய் சிந்துதலில் நடவடிக்கைக்காக நிகழ்வு கட்டுப்பாட்டு முறைமை மீது விழிப்பியலை ஏற்படுத்துவது நிகழ்வு முகாமைத்துவ குழாமுக்கு முக்கியமானதாகும்.

இதனால் இந்த நிகழ்வு கட்டுப்பாட்டு குழாமை பயிற்றுவிப்பதற்காக 4 நாள் வதிவிடத்திலான பயிற்சித் திட்டமொன்று நடத்தப்பட்டது. இப்பயிற்சித் திட்டம் மே 13இலிருந்து 16 வரை பேரழிவு முகாமைத்துவ நிலையத்துடனான கூட்டுமுயற்சியுடன் இறக்குவானை, புளுதோட்டவில் நடைபெற்றது.

பலதரப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படு த்துவதற்காக நியமிக்கப்பட்ட சகல பிரதிநிதிகளும் செயலமர்வில் பங்கு பற்றியதுடன், இதில் நிகழ்வு கட்டுப்பாட்டு முறைமையின் மீதும், சடுதியான எண்ணெய் சிந்துதலில் அது பயன்படுத்தப்படும் தன்மை யிலும் செயன்முறையிலான மூலகமொன்று ஒன்றிணைக்கப்பட்டது.









## 1.4 எண்ணெய்க் கழிவுகளின் கட்டுப் பாட்டுக்காக இரசாயனப் பிரிகைகளைப் பயன்படுத்துவதற்கான திட்டமொன்றைக் கட்டமைத்தல்

இலங்கையின் சமுத்திரப் பிராந்தியத்தில் எண்ணெய் சிந்துதலுக்கான உயர்வான ஆற்றலளவொன்றுள்ளது. எண்ணெய் சிந்துதல் இடம்பெறும் போது தணிப்பு பதிலிறுப்பொன்றாக இரசாயனபிரிகைகள் பயன்படுத்தப்பட முடியும்.

எனினும், இரசாயனங்களின் உபயோகத்தினால் கடல்சார் சூழல் பாதிப்படையலாம் என்பதனால் எண்ணெய் சிந்துதல்களின் கட்டுப்பாட்டுக்காக இரசாயனங்களின் அத்தகைய உபயோகம் அத்தகைய எண்ணெய் சிந்துதலின் இரசாயனபிரிகைகளின் நச்சுத்தன்மையை மதிப்பிட்ட பின்னர் மட்டுமே இலங்கையின் கடல்சார் பிராந்தியத்தினுள் அனுமதிக்கப்பட முடியும்.

நச்சுத்தன்மையை அளவிடுவதற்காக ஒரு நிச்சயமான முறைமையியல் வகுத்தமைக்கப்பட வேண்டும் என்பதுடன், ருகுணு பல்கலைக்கழகத்துடனான கூட்டுமுயற்சியில் திட்டமொன்று கட்டமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ருகுணு பல்கலைக்கழகம் ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ளதுடன், ஆராய்ச்சி யின் முடிவுகள் மீதான அடிப்படையில் மேற்சொல்லப்பட்ட முறைமையியல் வகுத்தமை க்கப்படும்.

### 2. கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச் சட்டம் தொடர்பில் ஒழுங்குவிதிகளைக் கட்டமைத்தல்

கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச்சட்டம் தொடர்பில் கட்டமைக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளில் கடலில் கொட்டப்படு வதற்கான கழிவின் கட்டுப்பாட்டுக்கான ஒழுங்கு விதியானது கடல்சார் சூழல் பாதுகாப்பு (கடலுக்கு ஒழிப்பதற்கான அனுமதிச்சீட்டுக் களின் வழங்கல்) ஒழுங்குவிதி இல.01/2013 என்றவாறு பிரகடனப்படுத்தப்பட்டது.

பின்வரும் ஒழுங்குவிதிகள் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன:

1. கப்பல்களினுள் தோற்றுவிக்கப்படும் கழிவின் உபசரணைக்கான வசதிகளை வழங்கு வதற்கான ஒழுங்குவிதிகள்
2. சூழல் மதிப்பீட்டு அறிக்கையை வகுத்தமை ப்பதற்கான ஒழுங்குவிதிகள்
3. கப்பல்களினுள் தீழ்ப்பின் சடுதியான நிகழ்வின் சந்தர்ப்பங்களில் சோதனைக்கான ஒழுங்குவிதிகள்
4. கப்பல்களினுள் தீழ்ப்பினைத் தடுப்பதற்காக பொருத்தப்பட வேண்டிய உபகரணங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள்


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

අංක 1816/37 - 2013 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

(රජයේ බලයපිට ප්‍රසිද්ධ කරන ලදී)

I වැනි කොටස: (I) වැනි ඡේදය - සාමාන්‍ය

රජයේ නිවේදන

එල්.ඩී.බී 14/2008.

සමුද්‍ර දූෂණය වැළැක්වීමේ පනත

2008 අංක 35 දරන සමුද්‍ර දූෂණය වැළැක්වීමේ පනතේ 27 වැනි සහ 28 වැනි වගන්ති සමග කියවිය යුතු 51 වැනි වගන්තිය යටතේ පරිසර හා පුනර්ජනනීය බලශක්ති අමාත්‍යවරයා විසින් සාදන ලද නියෝග.

සුසිල් ප්‍රේමජයන්ත,
පරිසර හා පුනර්ජනනීය බලශක්ති අමාත්‍ය.

2013 ජූනි මස 12 වැනි දින,
කොළඹ දී ය.

### 3. கப்பல்களில் தோற்றுவிக்கப்படும் கழிவு க்கான உபசரணை வசதிகள்

கப்பல்களில் தோற்றுவிக்கப்படும் கழிவுக்கான உபசரணை வசதிகளின் ஏற்பாடு அதிகார சபையை ஆளுகின்ற அதிகாரச்சட்டத்தின் தொடர்பில் அதிகார சபையுடன் பதிவுசெய்யப் பட்டுள்ள சேவை வழங்குனர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. 2013ஆம் ஆண்டில் அதிகார சபையுடன் 28 சேவை வழங்குனர்கள் பதிவுசெய்திருந்ததுடன், கப்பல்களுக்கு சேவை வழங்கப்பட்டது.

| ஆண்டு | சேவையை வழங்கிய கப்பல்களின் எண்ணிக்கை | அகற்றப்பட்ட கழிவின் தொன்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | எண்ணெய் | கழிவு |
| 2010 | 698 | 17000 | 2323 |
| 2011 | 976 | 18988 | 5854 |
| 2012 | 946 | 19422 | 3255 |
| 2013 | 1057 | 22650 | 5740 |





**கடந்த 4 வருடங்களில் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான விபரங்கள்**

இலங்கையில் வந்திறங்கும் ஒவ்வொரு கப்பலிலும் நிலவுகின்ற கழிவின் தொகை தொடர்பில் தரவுகளைப் பெறுவதற்கும், கழிவு ஒழித்தல் சேவையைப் பெறுவதற்கான அவசியம் மீது முன்னெச்சரிக்கை செய்வதற்கும் திட்டமொன்றைக் கொண்டிருக்குமுகமாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடனான கூட்டுமுயற்சியுடன் ஆரம்பப் பணி தொடங்கியது. இது உபசரணை சேவை வழங்குனர்களைப் பதிவுசெய்கின்றதும், உத்தரவுப்பத்திரம் வழங்குகின்றதுமான நடைமுறையை அதிகளவு செயற்றிறனாக செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4. பொக்கோஷிமா விபத்தைத் தொடர்ந்து இலங்கையின் கடல்சார் வலயத்தினுள் கதிரியக்கப் பொருள் ஊடுருவியுள்ளதா என்பதைச் சோதிப்பதற்கான சோதனை

இச் சோதனை அணுசக்தி அதிகார சபையுடனான கூட்டுமுயற்சியுடன் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இது பொக்கோஷிமா அணு விபத்தின் பின்னர் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் சர்வதேச அணு சக்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் அங்கமாகும்.

இலங்கையின் கரையோர வலயத்தில் பெருமளவு அடையாளங்காணப்பட்ட அமைவிடங்களிலிருந்து நீர் மாதிரிகளினதும், சேற்று மாதிரிகளினதும் பகுப்பாய்வுகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இக் கருத்திட்டத்தின் தரவுகளின் பிரகாரம், இலங்கையின் கடல்சார் வலயம் மீது ஏதேனும் அணு பாதிப்பினை பொக்கோஷிமா விபத்து விளைவிக்கவில்லை என்பது தோற்றமானதாகும். சமுத்திரத்திற்கு கிட்டியதாக அணு மின் நிலையங்களை பிராந்தியத்திலுள்ள பெருமளவு நாடுகள் நிறுவுவதனால் அத்தகைய தரவுகளைத் தொகுப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## 5. கரையோரச் சுத்திகரித்தல் திட்டங்கள்

2013ஆம் ஆண்டில் இலங்கையின் கரையோர வலயம் மீதான பெருமளவு தெரிவுசெய்யப்பட்ட அமைவிடத்தில் கரையோரச் சுத்திகரித்தல் திட்டங்கள் நடத்தப்பட்டன. அதேவேளை ஒவ்வொரு கரையோர மாவட்டத்திலும் கரையோர முகாமைத்துவக் குழுக்கள்

தாபிக்கப்பட்டன. தமது சம்பந்தப்பட்ட பகுதிகளில் கரையோரக் கழிவு முகாமைத்துவத் திட்டங்களை இக் குழுக்கள் மேற்கொண்டதுடன், கரையோரத்தில் குப்பை போடுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

**திட்டங்களின் இடங்கள்:**

கண்டகுளிய, அம்பகண்டவில, மெதவத்த, வென்னப்புவ, சலியன்குளம, பிட்டிபான, பமுனுகம, பயகல, வட்டுவ, பின்வத்த, பாணந்துறை, நல்லுறுவ, பலப்பிட்டிய, ஹபராதுவ, தொடமுன, கல்முனை, பரவிதுவ, மாத்தறை, பிஹிம்பிய, மாது ஆற்றின் பொங்குமுகம், பசியாவத்தை மற்றும் ஹம்பாந்தோட்டை.





## 6. பாடசாலைக் கடல்சார் குழுக்கள்

கடல்சார் சூழல் மீது கரையோரப் பகுதிகளிலிருந்து பாடசாலை சிறுவர்களின் விழிப்பியலையும், மனோநிலைகளையும் மேம்படுத்தும் நோக்கமொன்றுடன் தாபிக்கப்பட்ட பாடசாலை கடல்சார் குழுக்களுக்காக 196 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

இதேபோல், சமுத்திரம் மீது சிறுவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக ''பெனமுத்து'' (புதிர் முத்துக்கள்) என்ற நாமத்திலான புதிர்ப்போட்டி ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், சமுத்திரங்களுடன் இணைந்த உண்மைகள் மீது கல்விசார் விரிவுரைகள் நடத்தப்பட்டன.





கடல்சார் சூழல்களுடன் இணைந்த கருப்பொருள்கள் மீது பாடசாலை எல்லைச் சுவர்கள் மீது சித்திரங்கள் வரையப்பட்டன. பாடசாலை சிறுவர்களின் மனங்களில் கடல்சார் சூழலை நோக்கி சிறந்த மனோநிலைகளை ஊட்டுவதே இச்சித்திரங்களின் நோக்கமாகும். கரையோர வலயத்தில் பெருமளவு அடையாளங்காணப்பட்ட பாடசாலைகளில் இது வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதேவேளை, பாடசாலைக் கடல்சார் குழுக்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களின் விழிப்பியலை மேம்படுத்துமுகமாக, கரையோர மாவட்ட மட்டத்தில் பெருமளவு விழிப்பியல் திட்டங்கள் நடத்தப்பட்டன. கடல்சார் சூழலுடன் இணைந்துள்ள கல்விசார் மற்றும் கலாசார பெறுமதியைக் கொண்ட இடங்களுக்கும், பகுதிகளுக்கும் அவதானிப்பு பிரயாணங்களில் பங்கெடுப்பதற்காக பாடசாலை கடல்சார் குழுக்களைச் சார்ந்த பெருமளவு சிறுவர்களுக்கு செய்யப்பட்டது.



வருகைதந்த இடங்கள் வருமாறு:

- காலி கடல்சார் அருங்காட்சியகம்
- காலி வணிகத் துறைமுகம்
- உசன்கொட விசேட சூழல்முறைமை
- பட்ட-அத்த பண்ணை
- ரேகாவ கண்டல் வளங்கள் நிலையம்
- காலி கோட்டை பாதுகாப்பு அரண்
- வெளிச்சவீடு

சமுத்திரம் தொடர்பில் பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில் விழிப்பியலையும் மனோநிலை களையும் உருவாக்குவதும், அதனுடன் இணைந்துள்ள செயற்பாடுகள் ஊடாக கடல்சார் சூழலைப் பாதுகாப்பதுமே இவ் வவருகை தரல்களின் நோக்கங்களாகும்.

## 7. உணவகங்களினதும், தொழிற்சாலை களினதும் அவதானிப்பு

கடல்சார் தீழ்ப்புக்கு நேரடியாகப் பங்களிக்கின்ற தீழ்ப்புக்களின் மூலங்களைக் கண்டறியுமுகமாக நேரடியாக அல்லது மறைமுகமாக சமுத்திரத்தினுள் கழிவை விடுவிக்கும் வழிவகைகள் மீது கணக்கெடுப்பொன்று நடத்தப்பட்டது.

பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் அத்தகைய மூலங்களின் அமைவிடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், மூலங்களைத் திட்டமிடுவதன் ஊடாக தரவுகள் தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு உணவகத்தின் அல்லது தொழிற்சாலையின் கழிவு முகாமைத்துவத் திட்டம் ஆய்வு செய்யப் பட்டதுடன், கழிவு ஒழித்தலின் முறைமைகள் கரிசனைக்கெடுக்கப்பட்டது. இந்த அப்பியாச த்தின் ஊடாக சமுத்திரத்தினுள் கழிவினை விடுவிக்கும் உணவகங்களும், தொழிற்சாலை களும் அடையாளம் காணப்பட்டன. தீழ்ப்பின் தடுப்பினை நோக்கி செயற்படுகின்ற முதலாவது கட்டம் இது என அழைக்கப்பட முடியும்.

தொழிற்சாலைகளிலிருந்து சூழலினுள் விடுவிக்கப்படும் கழிவினால் விளைகின்ற தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்கும் நோக்கத் திற்காக அதிகார சபை கடல்சார் சூழல் பாதுகாப்பு (கடலில் ஒழிப்பதற்கான அனுமதிச் சீட்டுக்களின் வழங்கல்) ஒழுங்குவிதியை பிரகடனப்படுத்தியது. கடல்சார் சூழலுக்குள் கழிவு நீரை விடுவிப்பதில் ஆகக்கூடுதலான சகிப்புத்தன்மையிலான எல்லைகளை இது இட்டுள்ளது. இந்த ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அதிகார சபையிலிருந்து பெறப்பட்ட அனுமதிச் சீட்டின் பிரகாரம் புறநீங்கலாக கடல்சார் சூழலுக்குள் எப்பொருளும் விடுவிக்கப்பட முடியாது. இந் நடவடிக்கை கடல்சார் சூழல்களைப் பாதுகாப்பதில் அளப்பரிய முக்கியத்துவத்தைக் கொண்டதாகும்.



## 8. தெவட்ட செவன மர நடுகை






அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியின் பிறந்த தினத்திற்கு சமாந்தரமாக, கரையோர மாவட்டங்களில் மர நடுகைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. கரையோரப் பேணல் திணைக்களம், இராணுவம், வனப் பேணல் திணைக்களம், அரச சார்பற்ற தாபனங்கள் மற்றும் இந்நோக்கத்திற்கான வேறு தாபனங்கள் ஆகியவற்றின் பங்கெடுப்புடன் கடல்சார் சூழலியல்முறைமைகளினுள் நாற்றுக்களின் நடுகை மேற்கொள்ளப்பட்டது.

நீர்கொழும்பு கடலேரி, ரேகாவ கடலேரி, காலி, ஜிந்தோட்டை மற்றும் பேருவளை போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மத்தியில் நாற்றுக்களைப் பங்கிடுவதன் மூலம் மரநடுகை திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது.

## 9. நீரின் தரத்தைச் சோதித்தல்

நீரின் தரத்தைச் சோதிப்பதில் அதன் pH பெறுமதி, ஒக்சிசன் அடக்கம், உவர்தன்மை, மீதத்திலான மட்டம், மலக்கழிவு ஆகியவற்றுக்காக நீர் சோதிக்கப்பட்டது.

கடல் குளிப்பு இடங்களிலும், கடலினுள் பிரவேசிக்கும் கடல் மார்க்கங்களினாலான இடங்களிலும் கூட நீரின் தரம் சோதிக்கப்பட்டது. கோபாலபுரம், திருகோண மலைப் பட்டினம், கடலினுள் மகாவலி ஆறு பிரவேசிக்கும் இடங்கள், நிலாவெளி, பாசிக்குடா, கல்லடி, அறுகம்பே, பெரிய முகத்துவாரம், சின்ன முகத்துவாரம், தங்காலை, புறாக் கடற்கரை, கிரிந்த, பொல்ஹேன, பிஹிம்பிய, மொட-எல, வெல்லமடம, தொட்டமுன, மொறகல கடல் வலயம், களு கங்கையின் பொங்குமுகம், கல்கிசை கடற்கரை, வெள்ளவத்தை கால்வாய், களனி ஆறு, நீர்கொழும்பு கடற்கரைப் பூங்கா, ஜெறவின் கடற்கரை, சிலாபம் கடற்கரை வனம், புத்தளத்திலுள்ள மலேரியா கால்வாய், மற்றும் குக்நெகூட்டி கால்வாய் ஆகியனவே அத்தகைய இடங்களில் சிலவாகும். தொகுக்கப்பட்ட தரவுகள் பகுப்பாயப்பட்டதுடன், தரவுத் தளமொன்றும் தாபிக்கப்பட்டது.



நீர் மாதிரிகளைச் சோதித்தல் - கல்கிசை



நீர் மாதிரிகளைச் சோதித்தல் - கல்கிசை

## 10. விழிப்பியல் திட்டங்கள்

எம்மால் நடத்தப்பட்ட விழிப்பியல் திட்டங்கள் கடல்சார் தீழ்ப்பு மீது பலதரப்பட்ட சனசமூகக் குழுக்களின் அறிவையும், மனோநிலைகளையும் மேம்படுத்துவதிலும், கடல்சார் சூழலின் முக்கியத்துவத்திலும், அத்துடன் இலங்கையைச் சுற்றியுள்ள சமுத்திரத்தில் தீழ்ப்பினை குறைப்பதிலும் காரணகர்த்தாகவாக விளங்கின.

### நடத்தப்பட்ட திட்டங்கள்

- செட்டிபாளையம் பகுதிகளில் மீன்பிடித்தல் சனசமூகத்துக்கு அறிவூட்டுதல்
- திருக்கோவில், கல்முனை, அட்டாளைச் சேனை, நிந்தவூர், விநாயகபுரம், ஒலுவில் மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் உள்ள மக்களை அறிவூட்டுதல்
- களுமிட்டியாவ, ஹம்பாந்தோட்டை, கிரிந்த மற்றும் கேகாலை ஆகிய பகுதிகளில் உள்ள சனசமூகங்களை அறிவூட்டுதல்
- கதலுவ, கைகாவல மற்றும் இந்துருவ ஆகியவற்றில் மீன்பிடிச் சனசமூகத்திற்கான செயலமர்வு
- மீன்பிடி துறைமுகங்களால் விளைவிக்கப் படும் கடல்சார் தீழ்ப்பினை தடுக்குமுகமாக அவர்களுக்கு அறிவூட்டுவதற்காக காலி, தொடந்துவ, ஹிக்கடுவ மற்றும் அம்பலாங்கொட ஆகியவற்றிலுள்ள மீன்பிடி துறைமுகங்களின் ஊழியர்களுக்கு விழிப்பியல் திட்டம் நடத்தப்பட்டது
- கட்டுகொட, தேவத்த மற்றும் காலி ஆகிய பகுதிகளில் கரையோரச் சமூகங்களின் பிரதிநிதிகளை அறிவூட்டுதல்
- பேருவளையில் உள்ள மருதானை பகுதியில் சனசமூகங்களை அறிவூட்டு வதற்கான விழிப்பியல் திட்டம்

## 11. பாடசாலைகளுக்கு இடையிலான கடல்சார்-குழு நாடகப் போட்டி

கொழும்பு, கம்பஹா, புத்தளம், களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய 08 மாவட்டங்களில் தாபிக்கப்பட்ட பாடசாலை கடல்சார் குழுக்கள் மத்தியில் ‘‘சகல உயிர்வாழ்வனவற்றின் நல்லதுக்காக சமுத்திர வளங்களை நாம் பாதுகாப்போம்’’ என்ற கருப்பொருள் மீது மாவட்ட மட்ட நாடகப் போட்டி நடத்தப்பட்டது.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வெற்றியீட்டிய பாடசாலைகள் வருமாறு:

1. புத்தளம் மாவட்டம் - ஆனந்த கல்லூரி, புத்தளம்

2. கம்பஹா மாவட்டம் - துங்கல்பிட்டிய கனிஷ்ட பாடசாலை

3. கொழும்பு மாவட்டம் - ஸ்ரீ மெத்தானந்த கல்லூரி, மோதரை

4. களுத்துறை மாவட்டம் - ஸ்ரீ சுமங்கல மகளிர் கல்லூரி, பாணந்துறை

5. காலி மாவட்டம் - ஸ்ரீ சுமங்கல கல்லூரி, ஹிக்கடுவ

6. மாத்தறை மாவட்டம் - ஷரிபுத்ர கல்லூரி, பம்புறான

7. ஹம்பாந்தோட்டை மாவட்டம் - தங்காலை மகளிர் பாடசாலை

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இறுதிப் போட்டி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் 2013 மே 30 அன்று சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளர் திரு.வி.எம்.யு.டி.பசநாயக்கவின் ஆதரவின் கீழ் நடைபெற்றது. நாடகப் போட்டியில் பாடசாலைச் சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 300க்கு மேற்பட்டவர்கள் பங்கெடுத்தனர். பின்வரும் பாடசாலைகள் வெற்றியீட்டியவையாகும்.

1. முதல் இடம் - காலி/ஸ்ரீ சுமங்கல கல்லூரி, ஹிக்கடுவ (காலி)

2. இரண்டாவது இடம் - ஸ்ரீ மெத்தானந்த கல்லூரி, மோதரை (கொழும்பு)

3. மூன்றாவது இடம் - ஸ்ரீ சுமங்கல கல்லூரி (களுத்துறை)

## 12. உலக சமுத்திரங்கள் தினம்

உலக சமுத்திரங்கள் தினத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நீரியல் உயிரியல் விஞ்ஞான சங்கம், தேசிய மிருகக்காட்சிச்சாலை மற்றும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் பிரிவு D ஆகியவற்றுடன் சேர்ந்து, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை 2013 ஜூன் 08 அன்று தேசிய விலங்கியல் பூங்காவில் "ஒன்றுசேரவும், ஓரே மனதுடனும் சமுத்திரத்தை நாம் பாதுகாப்போம்" என்ற கருப்பொருள் மீது வெற்றிகரமாக குறித்தது.

இந்த அங்குரார்ப்பண வைபவம் சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்தவின் ஆதரவின் கீழ் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வள நபர்களாக ருகுணு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் (செல்வி) ருச்சிர குமாரணதுங்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக விலங்கு விஞ்ஞானங்கள் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கமால் ரணதுங்க, சர்வதேச பேணல் ஒன்றியம் (IUCN) போதனாசிரியர் திரு.அர்ஜன் ராஜசூரிய ஆகியோர் பங்கெடுத்தனர். இந் நிகழ்வில் பாடசாலைகளுக்கிடையிலான கடல்சார் குழு நாடகப் போட்டியில் வெற்றியீட்டிய நாடகம் மேடையேற்றப்பட்டது. பதக்கங்கள், கிண்ணங் கள் மற்றும் சான்றுப்பத்திரங்கள் ஆகியவற்றை கௌரவ அமைச்சர் வழங்கினார்.



தெகிவளை மிருகக்காட்சிச்சாலையில் ஜூன் 08 அன்று உலக சமுத்திரங்கள் தினம் நடத்தப்பட்டது.



தெகிவளை மிருகக்காட்சி சாலையில் ஜுன் 08 அன்று உலக சமுத்திரங்கள் தினம் நடத்தப்பட்டது.

விழிப்பியல் மகாநாட்டுக்கு மேலதிகமாக, நாள் முழுவதும் மிருகக்காட்சிச்சாலை இடப்பரப்பில் பலதரப்பட்ட கல்விசார் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அவை சுவரொட்டிப் போட்டிகள், புகைப்படப் போட்டிகள், புதிர் போட்டி மற்றும் முகத்துக்கும், கைவிரல் களுக்கும் வர்ணமடித்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியிருந்தன.



தெகிவளை மிருகக்காட்சி சாலையில் ஜுன் 08 அன்று உலக சமுத்திரங்கள் தினம் நடத்தப்பட்டது.

### 13. சூழல் ஆய்வரங்கு - 2013

கடல்சார் சூழலைப் பாதுகாக்கின்றதும், கடல்சார் சூழலுக்கான பயமுறுத்தல்களை நீக்குவதுமான நோக்கமொன்றுடன் இலங்கை யில் முதலாவது கடல்சார் சூழல் ஆய்வரங்கு சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்தவின் ஆதரவின் கீழ் நடைபெற்றதுடன், இதில் அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற தாபனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நூற்கல்வியாளர்கள் பங்கெடுத்தனர். கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் ருகுணு பல்கலைக்கழகத்தின் சமுத்திரவியல் விஞ்ஞான தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றினால் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த கடல்சார் சூழல் ஆய்வரங்கு 2013 ஓகஸ்ட் 27இலும், 28இலும் பெந்தோட்டையில் உள்ள இந்துருவ பீச் ரிசோர்ட்டில் நடைபெற்றது. ருகுணு பல்கலைக்கழகத்தின் சமுத்திரவியல், கடல்சார் நீரியல் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி ரேணி பிரதீப்குமாரவினால் ஆய்வரங்கின் முக்கிய உரையாற்றப்பட்டது. நான்கு அமர்வுகளைக் கொண்ட ஆய்வரங்கு கலாநிதி சாலிய விக்ரமசூரிய, பேராசிரியர் என்.பி. விஜயநந்தன, சிரேஷ்ட விரிவுரையாளர் ருச்சிர குமாரணதுங்க, கலாநிதி கே.பி.அருளானந்த, பேராசிரியர் ஜே.எம்.பி.கே.ஜயசிங்க மற்றும் கலாநிதி மல்லிகா குணசேகர ஆகியோரினால் தலைமை வகிக்கப்பட்டது. ‘கடல்சார் சூழல்’, ‘கடல்சார் உயிருள்ளதும், உயிரற்றதுமான வளங்கள்’ மற்றும் ‘கூருணர்விலான கடல்சார் சூழலியல்முறைமைகள்’ ஆகிய கருப்பொருள் களில் கலந்துரையாடுவதற்காக பெருமளவு ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

வெற்றிகரமான கலந்தாய்வுகளினதும், கருத்துப் பரிமாறுதல்களினதும் பின்னர், கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்கான தேசிய கொள்கை யொன்றை வகுத்தமைப்பதற்கான இறுதித் தீர்மானத்துடன் ஆய்வரங்கு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.





### 14. சர்வதேச கரையோரச் சுத்திகரித்தல் தினம்

ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதத்தின் மூன்றாவது வாரத்தின் சனிக்கிழமை வரும் சர்வதேச கரையோர சுத்திகரித்தல் தினம் இவ்வருடம் செப்ரெம்பர் 21 அன்று நடைபெற்றது. இதன் தேசியத் திட்டம் சுமார் 300 பாடசாலைகளைக் கொண்ட குழுவினர், உணவகங்களைச் சார்ந்தோர் மற்றும் அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற தாபனங்களின் அலுவலர்கள் ஆகியோரின் பங்கெடுப்புடன், கல்கிசை கரையோர வலயம் மீது நடத்தப்பட்டது. இத் தேசிய நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பிராந்திய அலுவலகங் களினால் தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களில் கரையோரச் சுத்திகரித்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலதிகமாக, ஒரு முருகைக் கற்பார்த்தொடர் சுத்திகரித்தல் திட்டமும் திருகோணமலையில் புறா தீவுகளை நோக்காகக் கொண்டு நடத்தப்பட்டது.





### 15. கடல்சார் சூழலியல் அளவீடுகள் செயலமர்வு

இலங்கையின் 08 கரையோர மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட கரையோர அமைவிடங் களில் அடிமட்ட தரவுகளைத் தொகுப்பதற்காக கடல்சார் சூழலியல் அளவீடுகள் திட்டமிடப் பட்டுள்ளன. இதை நோக்கிய ஆரம்ப நடவடிக்கையொன்றாக, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தொழில்நுட்பப் பிரிவின் அலுவலர்களுக்காக பயிற்சி செயலமர்வொன்று மாத்தறையில் 2013 பெப்ரவரி 26 அன்று நடைபெற்றதுடன், இது ருகுணு பல்கலைக்கழகத்தின் சமுத்திரவியல், கடல்சார் நீரியல் திணைக்களத்தின் விரிவுரை யாளர்களினால் நடத்தப்பட்டது.

அதன் இரண்டாவது நடவடிக்கையாக மொரகொல்லையில் பாபெரியன் முருகைக்கல் கற்பார்த்தொடருடன் இணைந்துள்ள சூழலியல் தரவு ஆராய்ச்சி மீதான செயன்முறை செயலமர்வொன்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த சகல அலுவலர்களின் பங்கெடுப்புடன் நடத்தப்பட்டது. ருகுணு பல்கலைக்கழகத்தின் சமுத்திரவியல், கடல்சார் நீரியல் திணைக்களத்தின் விரிவுரையாளர்கள் வள நபர்களாக பங்கெடுத்தனர்.

இது இலங்கையின் கரையோர வலயத்தினுள் கடல்சார் சூழலியல் தரவுகள் மீதான அளவீடொன்றை நடத்துவதன் மூலமும், எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய சில சூழலியல் மாற்றங்களின் காரணமாக கடல்சார் சூழலில் இடம்பெறும் மாற்றங்கள் மீதான அவதானிப்பினை தொகுப்பதன் மூலமும் ஆரம்பத் தரவுத்தளமொன்றை உருவாக்குவதை இயலச்செய்யும்.

# 3. நிருவாக, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் சட்டப் பிரிவுகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

## 3.1 நிருவாகப் பிரிவு

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணியாளர்களின் சேவையில் நியமனத்தி லிருந்து அதிகார சபையின் ஏனைய பிரிவுகளின் செயற்பாட்டுக்கான வசதிகளை வழங்குதல் வரை சகல ஆளணி யினரையும் நிருவகிப்பது நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும். அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அலுவலகரான பொது முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் நிருவாகப் பிரிவு செயற்படுகின்றது.

**31.12.2013இல் உள்ளவாறு அதிகார சபையின் அலுவலர் மீதான வெற்றிடங்கள்**

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண். | தொழிலாற்றும் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பிரதம நிறைவேற்று அலுவலர் | 01 | - | 01 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 04 | 01 | 03 |
| நடுத்தர முகாமையாளர்கள் | 12 | 10 | 02 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 12 | 10 | 02 |
| வினைப்படுத்தல் அலுவலர்கள் | 12 | 12 | - |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத | 19 | 19 | - |
| தரப்படுத்தப்பட்ட அலுவலர்கள் | 09 | 08 | 01 |
| ஓரளவு தரப்படுத்தப்பட்ட அலுவலர்கள் | 64 | 46 | 18 |
| தரப்படுத்தப்படாத அலுவலர்கள் | 09 | 08 | 01 |
| **மொத்தம்** | **142** | **114** | **28** |

1 அவசியமான தகைமைகளைக் கொண்டிருந்த வெளிவாரி தேருநர்கள் மத்தியில் 06 வெற்றிடத்திலான முகாமைத்துவ உதவியாளர் பதவி களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.

2 அத்துடன் வெற்றிடமாகவிருந்த கடல் சார் சூழல் உதவியாளரின் பதவிக்கு 05 தகைமையிலான பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது.

3 அலுவலகப் பணியை மிகவும் முறைமையாகவும், செயற்றிறனாகவும் செய்யுமகமாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கான பதிலிறுப்பாக, 26 பதவிகளுக்காக பொருத்தமான பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கு 2013இல் முகாமை த்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகாரத்தை வழங்கியது.

4 வெற்றிடமாகவிருந்த இரு சாரதி பதவிநிலைகளுக்கும், இரு உதவியாளர் பதவிநிலைகளுக்கும் வெளிவாரி தேருநர்கள் மத்தியிலிருந்து ஆட்சேர்ப்பு க்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டின் போது 1 சாரதி பதவிநிலை, 1 உதவியாளர் பதவிநிலை, 2 கடல்சார் சூழல் உதவியாளர் பதவிநிலைகள், 2 கடல்சார் சூழல் அலுவலர் பதவிநிலைகள் மற்றும் 1 முகாமைத்துவ உதவியாளர் பதவிநிலை ஆகியனவற்றைக் கொண்ட மொத்தமாக 7 பதவிநிலைகளுக்கான வெற்றிடங்களை ராஜினாமாக்கள் விளைவித்தன.

### 3.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

பயிற்சியின் மூலம் க.சூ.பா.அதிகார சபையின் பணியாளரின் ஆற்றலளவும், திறன் முன்னேற்றமும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும். க.சூ.பா.அதிகார சபையின் பிரதம நிறைவேற்றுனராக பொது முகாமையாளரினால் பிரிவின் செயற்பாடுகள் வழிகாட்டப்படுகின்றன.

#### பிரிவின் பொறுப்புக்கள்

1. பணியாளரின் பயிற்சித் தேவைகளை அடையாளம் காணுதல், பயிற்சியை நடத்துவதற்கு பொருத்தமான வள நபர்களையும், நிறுவனங்களையும் தெரிவு செய்தல். இலங்கையிலும் வெளிநாடு களிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், இதன் பிரகாரம் பயிற்சிக்காக பணியாளரை அனுப்பிவைத்தல்.

2. பணியாட் உறுப்பினர்கள் பயிற்சியை சரிவர பெறுவதை பார்ப்பதற்கு அல்லது ஏதாவது குறைபாடுகள் உள்ளனவா என்பதுடன் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவசியமான தீர்வையிலான நடவடிக்கையை எடுப்பதற்கும் பயிற்சியைக் கண்காணித்தல்.

3. பணியாளரின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை மதிப்பாய்தல்.

4. பணியாளரைத் தரப்படுத்துவதற்கான நடைமுறையையும், பதவியேற்றத்திற்கான திட்டங்களையும் தயாரித்தல்.

5. பொது முகாமையாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பணியாளர் தொடர்பான விபரங்களையும், நிறுவனரீதியிலான செயற்பாடுகளையும் அவ்வாறு செய்யுமாறு கோரப்படும் போது நேரடி அமைச்சுக்கும் மற்றும் வேறு வெளிவாரி நிறுவனங் களுக்கும் வழங்குதல்.

6. ஊழியர்களின் சேமநலன்

| காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 831,669.30 | 972,732.12 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 1,390,709.00 | 1,329,504.06 |
| சீருடைகள் | 67,335.50 | 56,235.12 |
| **மொத்தம்** | **2,289,713.80** | **2,358,471.30** |
| **5.02 பராமரிப்புச் செலவினம்** | | |
| வாகனங்களின் பராமரிப்பு | 2,263,944.35 | 1,520,724.62 |
| பொறி, எந்திரங்கள், சாதனங்களின் பராமரிப்பு | 642,788.02 | 415,047.93 |
| அலுவலகப் பராமரிப்பு | 101,382.00 | 35,469.00 |
| **மொத்தம்** | **3,008,114.36** | **1,971,241.56** |

| குறிப்பு 06 | வேறு மீளவரும் செலவினம் | |
|---|---|---|
| | 2013 (ரூபா) | 2012 (ரூபா) |
| **6.01 பிரயாணம்** | | |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 1,545,254.17 | 1,440,485.07 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 491,836.55 | 310,350.25 |
| | **2,037,090.72** | **1,750,835.32** |
| **6.02 ஒப்பந்தச் சேவைகள்** | | |
| தொலைத்தொடர்பு/தபால் கட்டணங்கள் | 956,572.74 | 923,152.72 |
| மின்சாரம் மற்றும் நீர் செலவினங்கள் | 2,032,155.77 | 1,726,397.73 |
| அலுவலக வாடகை | 7,343,081.94 | 6,554,887.53 |
| வேறு ஒப்பந்தச் சேவைகள் | 2,113,603.05 | 2,125,974.43 |
| **மொத்தம்** | **12,445,413.50** | **11,330,412.41** |

| குறிப்பு 07 | உதவு தொகைகள் மற்றும் வேறு கைமாற்றக் கொடுப்பனவுகள் | |
|---|---|---|
| **உதவு தொகைகள் மற்றும் வேறு கைமாற்றக் கொடுப்பனவுகள்** | 2013 (ரூபா) | 2012 (ரூபா) |
| ஆண்டுக்கான மொத்த மூலதன உதவுதொகை | 42,493,291.50 | 39,827,773.96 |
| **கழிக்குக:** | | |
| மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட தொகை | (4,952,734.00) | (12,903,678.52) |
| முன்னேற்றத்தில் உள்ள வேலைக்கான மூலதனச் செலவினங்கள் | (14,481,822.55) | |
| **ஆண்டின் போது நிதித் தொழிற்பாடுகளின் கூற்றுக்காக கைமாற்றப்பட்ட தொகை** | **23,058,734.95** | **26,924,095.44** |

| குறிப்பு 08 | நிதிசார் ஆகுசெலவு | |
|---|---|---|
| **நிதிசார் ஆகுசெலவு** | 2013 (ரூபா) | 2012 (ரூபா) |
| வங்கிக் கட்டணங்கள் | 36,800.00 | 47,162.10 |
| **மொத்தம்** | **36,800.00** | 47,162.10 |

| குறிப்பு 09 | ஆதனம், பொறி, சாதனங்களின் மதிப்பிறக்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சொத்துக்களின் வகை | ஆகுசெலவு 2013 | | | மதிப்பிறக்கம் 2013 | | | பெறுமதி பதிவழிக்கப்பட்ட |
| | 01.01.2013 | மேலதிகங்கள் | 31.12.2013 | 01.01.2013 | மேலதிகங்கள் | 01.01.2013 | |
| மோட்டார் வாகனங்கள் | 36,048,912.63 | - | 36,048,912.63 | 17,261,417.40 | 6,069,676.00 | 23,331,093.40 | 12,717,819.23 |
| மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலகச் சாதனங்கள் | 21,372,205.07 | 2,167,186.60 | 23,539,391.67 | 10,777,448.79 | 2,240,580.77 | 13,018,029.56 | 10,521,362.11 |
| தொழில்நுட்பச் சாதனங்கள் | 18,534,925.49 | 2,572,599.40 | 21,107,524.89 | 4,512,427.74 | 1,992,244.72 | 6,504,672.46 | 14,602,852.43 |
| நூலக நூல்கள் | 189,508.50 | 212,948.00 | 402,456.50 | - | 32,945.31 | 32,945.31 | 369,511.19 |
| மொத்தம் | **75,956,043.19** | **12,903,678.52** | **113,649,579.62** | **32,551,293.93** | **10,335,446.79** | **23,238,054.60** | **38,211,544.09** |

| குறிப்பு 10 | பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள் | |
|---|---|---|
| **பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| இலங்கை வங்கி – 194109 | 15,039,963.59 | 4,580,820.28 |
| மக்கள் வங்கி - தெமட்டகொட | 513,964.62 | 931,969.99 |
| **மொத்தம்** | **15,553,928.21** | **5,512,790.27** |

| குறிப்பு 11 | கடன்தருனர்கள் | |
|---|---|---|
| **கடன்தருனர்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| ஷெஹான் குரனரு – வாடகைக் கொடுப்பனவுகள் | 13,500.00 | 13,500.00 |
| மீளவரும் முற்பணம் | 8,750.00 | - |
| **மொத்தம்** | **22,250.00** | **13,500.00** |

| குறிப்பு 12 | வைப்புக்கள் | |
|---|---|---|
| **வைப்புக்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| வாடகைக்காக மீளளிக்கத்தக்க வைப்பு - பிராந்திய அலுவலகம், காலி | 96,000.00 | 96,000.00 |
| வாடகைக்காக மீளளிக்கத்தக்க வைப்பு – தலைமையலுவலகம் | 1,890,000.00 | 1,090,000.00 |
| வாடகைக்காக மீளளிக்கத்தக்க வைப்பு - பிராந்திய அலுவலகம், திருகோணமலை | 7,500.00 | 7,500.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - நடமாடும் தொலைபேசிகளுக்கான ஐ.டி.டி. வசதி | - | 3,500.00 |
| நடமாடும் தொலைபேசிகளுக்கான மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - | - | 1,500.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - நடமாடும் தொலைபேசிகளுக்கான இன்ரர்நெற் | 1,500.00 | 1,500.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் - நடமாடும் தொலைபேசிகளுக்கான இன்ரர்நெற் | 3,000.00 | 3,000.00 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் | 6,100.00 | 6,100.00 |
| வைப்புக்கள் - வங்கியாடல் கற்கைகள் நிலையம் | 10,000.00 | 10,000.00 |
| **மொத்தம்** | **2,014,100.00** | **1,219,100.00** |

| குறிப்பு 13 | முன்-கொடுப்பனவுகள் | |
|---|---|---|
| **முன்-கொடுப்பனவுகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| வாடகை முன்-கொடுப்பனவுகள் | 117,369.86 | 112,142.47 |
| காப்புறுதி முன்-கொடுப்பனவுகள் | 278,582.03 | 301,938.33 |
| பராமரிப்பு முன்-கொடுப்பனவுகள் | 156,798.68 | 181,637.31 |
| வேறு முன்-கொடுப்பனவுகள் | 49,398.92 | 1,676.71 |
| **மொத்தம்** | **602,149.49** | **597,394.81** |

| குறிப்பு 14 | அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள் | |
|---|---|---|
| **அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2012இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 5,633,670.23 | 6,257,776.56 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் | 3,516,000.00 | 2,120,055.56 |
| மொத்த அறவிடக்கூடிய தொகை | 9,149,670.23 | 8,377,832.12 |
| **கழிக்குக:** | | |
| ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை | 2,910,706.14 | 2,744,161.89 |
| **31.12.2012இல் உள்ளவாறு மீதி** | **6,238,964.09** | **5,633,670.23** |

| குறிப்பு 15 | நடைமுறைப் பொறுப்புக்கள் | |
|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| கடன்தருனர்கள் | - | 1,874,745.83 |
| 2011க்கு கிடைக்கவேண்டிய WRS | 3,000.00 | - |
| கொடுப்பனவுக்குரிய மின்சார மற்றும் நீர் சிட்டை | 139,826.40 | 121,521.07 |
| கொடுப்பனவுக்குரிய வாடகை | - | 32,000.00 |
| கொடுப்பனவுக்குரிய தொலைபேசி சிட்டைகள் | 61,643.26 | 62,188.25 |
| ஹொல்சிம் லங்கா பிறை. லிமிற். | - | 108,228.00 |
| கொடுப்பனவுக்குரிய வேறு செலவினங்கள் | 51,435.00 | 53,630.00 |
| வாகனப் பராமரிப்புச் செலவினம் | - | 200.00 |
| கொடுப்பனவுக்குரிய மேலதிகநேர வேலை | 2309.69 | 20,977.11 |
| கொடுப்பனவுக்குரிய வேறு படிகள் | 7,500.00 | 86,750.00 |
| கொடுப்பனவுக்குரிய உள்நாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 157,154.75 | 12,099.00 |
| கொடுப்பனவுக்குரிய முத்திரைத் தீர்வை | 25.00 | 100.00 |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி** | **422,894.10** | **2,372,439.26** |

| குறிப்பு 16 | பணியாளர் கடன் நிதியம் | |
|---|---|---|
| **பணியாளர் கடன் நிதியம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 6,565,640.22 | 6,389,200.68 |
| **கூட்டுக:** | | |
| கிடைத்த மேலதிகமான நிதியம் | - | - |
| ஆண்டுக்கான வட்டி | 188,145.59 | 176,439.54 |
| **கழிக்குக:** | | |
| வங்கிக் கட்டணங்கள் | (857.10) | 2,636.00 |
| **31.12.2013இல் உள்ளவாறு மூடுதல் கடன் மீதி** | **6,752,928.71** | **6,565,640.22** |

| குறிப்பு 17 | பணிக்கொடைக்கான ஏற்பாடு | |
|---|---|---|
| **பணிக்கொடைக்கான ஏற்பாடு** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 4,480,874.50 | 3,756,087.50 |
| மீளவாயபப்ட்ட மீதி | 1,544,400.00 | - |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 1,301,630.50 | 782,647.00 |
| **கழிக்குக:** | 7,326,905.00 | 4,538,734.50 |
| **ஆண்டின் போது கொடுப்பனவுகள்** | - | - |
| **31.12.2012இல் உள்ளவாறு மீதி** | 42,525.00 | 57,860.00 |

| குறிப்பு 18 | அரசாங்க உதவுதொகைகள் மற்றும் மூலதனம் | |
|---|---|---|
| **அரசாங்க உதவுதொகைகள் மற்றும் மூலதனம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 43,404,750.36 | 39,814,311.09 |
| திருத்தங்களின் செம்மைப்படுத்தல் | 189,508.50 | 144,291.93 |
| **கூட்டுக:** | | 39,827,773.96 |
| ஆண்டின் போது கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 42,493,291.50 | 39,827,773.96 |
| **கழிக்குக:** | | |
| வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது (SLAS 24) | 33,394,181.67 | 36,381,626.62 |
| நடந்துகொண்டிருக்கும் வேலை மீதான மூலதனச் செலவினங்கள் | 14,481,822.5 | |
| **31.12.2012இல் உள்ளவாறு முடுதல் மீதி** | **38,211,546.13** | **43,404,750.36** |

| குறிப்பு 19 | திரண்ட பற்றாக்குறை | |
|---|---|---|
| **திரண்ட பற்றாக்குறை** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | (4,223,489.36) | (1,181,004.78) |
| தவறுகளின் செம்மைப்படுத்தல் | | |
| பின்போடப்பட்ட வருமானத்திற்கான கைமாற்றம் | - | 144,291.93 |
| ஆண்டுக்கான பற்றாக்குறை/மேன்மிகை | - | (1,227,773.96) |
| மீளவாயப்பட்ட மீதி – பணிக்கொடைகள் | (1,544,400.00) | - |
| ஆண்டுக்கான பற்றாக்குறை/மேன்மிகை | (2,804,789.20) | (1,814,710.62) |
| **31.12.2013இல் உள்ளவாறு மீதி** | **(8,572,678.56)** | **(4,223,489.36)** |

-

-

| குறிப்பு 20 | கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | |
|---|---|---|
| **கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 13,355,525.74 | 12,309,913.55 |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | 1,223,927.46 | 1,045,612.19 |
| **31.12.2013இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **14,579,453.20** | **13,355,525.74** |

| குறிப்பு 21 | EIA வைப்புகள் | |
|---|---|---|
| **EIA வைப்புகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | **486,990.50** | **-** |
| கிடைத்த நிதியங்கள் | - | 500,000.00 |
| **கழிக்குக:** | | - |
| ஆண்டின் போது ஏற்கப்பட்ட செலவினம் | 39,947.00 | **13,009.50** |
| **31.12.2013இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **447,043.50** | **486,990.50** |

| குறிப்பு 22 | முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம் | |
|---|---|---|
| **முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| 2014க்கான கழிவு உபசரணை சேவைப் பதிவு மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள் | 1,230,500.00 | 1,646,000.00 |
| 2014க்கான எண்ணெய் நிரப்புதல், ஏற்றுதல் பதிவு மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள் | 457,000.00 | 48,000.00 |
| 2014 கழிவு ஒழித்தல் கட்டளைகள் பதிவு | 51,500.00 | - |
| 2014 விநியோகஸ்தர்களின் பதிவு | 276,000.00 | - |
| 31.12.2013இல் உள்ளவாறு மீதி | **2,015,000.00** | **1,694,000.00** |

| குறிப்பு 23 | கையிருப்புக்கள் | |
|---|---|---|
| **கிடைத்த உதவுதொகைகள்** | **2013 (ரூபா)** | **2012 (ரூபா)** |
| ஆண்டின் போது பெறப்பட்ட கைமாற்றங்கள் | 3,858,594.00 | **-** |
| **கழிக்குக:** | **-** | **-** |
| வருமான, செலவினக் கணக்குக்கு கைமாற்றங்கள் | **-** | **-** |
| **31.12.2013இல் உள்ளவாறு மீதி** | 3,858,594.00 | - |

24. 2011 நொவம்பரில் 6-மாத திறைசேரி உடனுண்டியல்களில் அதிகார சபை ரூபா 10 மில்லியனை முதலீடு செய்ததுடன், இது 2013ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்ததுடன், மொத்தத் தொகை (வட்டி மற்றும் முதலீட்டுத் தொகை) திறைசேரி உண்டியல்களில் மீள்-முதலீடு செய்யப்பட்டது. திறைசேரி உடனுண்டியல்களிலிருந்து வட்டி வருமானமாக 2013ஆம் ஆண்டின் போது ரூபா 1,223,927.46 ஈட்டப்பட்டது. எனவே, 2013இல் மீள்-முதலீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 12,979,451.23 ஆகும். இது நிதிசார் நிலையின் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

25. நாளாந்த அடிப்படை மீது திறைசேரி உடனுண்டியல்களை மீள்-கொள்வனவு செய்வதற்காக நடைமுறைக் கணக்கில் நாளின் இறுதியில் மேன்மிகையிலான பண மீதியை முதலீடு செய்வதை அதிகார சபை ஆரம்பித்தது. இந் நடைமுறை ஆண்டின் இறுதிவரை தொடர்ந்ததுடன், வட்டி வருமானமாக ரூபா 962,403.40 பெறப்பட்டது. இந்த வட்டி வருமானம் ஆண்டின் மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

26. ஆண்டின் போது எண்ணெய் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்காக சூழல் பாதுகாப்பு அனுமதிச்சீட்டினை வழங்குவதன் மூலம் வருமானமாக ரூபா 1,243,617.00ஐ அதிகார சபை ஈட்டியது. ஆண்டின் போது கழிவு உபசரணைச் சேவையிலிருந்து அதன் வருமானத்தை அதிகார சபை ரூபா 9,160,000.00 வரை அதிகரித்தது.

27. ஆண்டின் போது ரூபா 4,739,786.00 பெறுமதியான நிலையான சொத்துக்களை அதிகார சபை பெற்றுக்கொண்டது. இச் சொத்துக்கள் அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் ஆகியனவற்றை உள்ளடக்குகின்றன.

28. 2012இன் இல.01 எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தாபனம் அல்லது மக்கள் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசரகாலத் திட்டமொன்றைக் கொண்டிருக்கவேண்டும். ஆண்டின் போது அதிகார சபை 2 அவசரகாலத் திட்டங்களை அங்கீகரித்ததுடன், அங்கீகாரக் கட்டணமாக ரூபா 101,000.00ஐ ஈட்டியது. இந்த அங்கீகாரக் கட்டணம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

29. 2011இன் இல.02 எண்ணெய் ஏற்றுதல், இறக்குதல் (கடல்சார் சூழல் பாதுகாப்பு) ஒழுங்குவிதியின் பிரகாரம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தாபனம் அல்லது மக்கள் ஒவ்வொரு வருடமும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையுடன் பதிவுசெய்து கொள்ள வேண்டும். ஆண்டின் போது எண்ணெய் நிரப்புதல், ஏற்றுதல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 14 நிறுவனங்கள் அதிகார சபையுடன் பதிவுசெய்ததுடன், விண்ணப்ப மற்றும் பதிவுக் கட்டணங்களாக ரூபா 1,255,000,000.00ஐ ஈட்டியது. இந்த வருமானம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக, ஆண்டின் போது வீதி தாங்கி வாகனங்களின் பதிவு என்ற வழியாக ரூபா 204,000.00ஐ அதிகார சபை ஈட்டியது.

30. 01.01.2012இலிருந்து செயற்படத்தக்கதாக சூழல் தாக்க மதிப்பீடு (சூ.தா.ம.) அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதில் ஏற்படுகின்ற செலவினங்களை உள்ளடக்குவதற்காக படிநிலைப்படுத்தல் கட்டணமொன்றைச் சுமத்துவதென அதிகார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இதன் பிரகாரம், ஆண்டின் போது சூ.தா.ம. அறிக்கைகளைப் பெறுவதற்காக ரூபா 500,000.00 கொண்ட வைப்பொன்றை கோர்ன் லங்கா கம்பெனி செய்தது. சூ.தா.ம. நடைமுறையுடன் தொடர்பான செலவினத்தைக் கழித்த பின்னர் பணத்தின் மீதியானது நிதிசார் நிலையின் கூற்றில் 'நடைமுறை

பொறுப்புக்களின்' கீழ் 'சூ.தா.ம. கருத்திட்ட வைப்பாக' காட்டப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டின் இறுதியில் மீதி ரூபா 447,043.50 ஆகும்.

31 பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு – கொள்கைகளின் மாற்றம்

1. பணிக்கொடைகளைக் கணக்கெடுப்பதன் அடிப்படையானது அடிப்படைச் சம்பளத்தின் தொகை மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியனவாக மாற்றப்பட்டுள்ளது (தொழில் ஆணையாளரின் பணிப்புரையின் பேரில்).
2. பொது வியாபார முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் 60 வயதுக்கு இளைப்பாற்று வயது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், இளைப்பாற்று வயதாக 60 வயதை அதிகார சபை கரிசனைக்கெடுத்துள்ளது. இது முன்னைய வருடங்களில் 55 வயதாகும்.
3. பொது வியாபார முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் ஒரு புறம்பான கணக்கு பணிக்கொடைகளுக்காக நிலவவேண்டும்.

32 நடந்துகொண்டிருக்கும் மொத்த வேலை

ஆண்டின் போது திறைசேரியிலிருந்து 36.875 மில்லியன் ரூபா கொண்ட தொகையொன்று கிடைத்தது. இதில் ரூபா 22,393,177.45 மொத்தச் செயற்பாடுகளுக்காக செலவழிக்கப்பட்டது. மீதியான ரூபா 14,481,822.55 பண மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்ட கேள்விகள் இரத்துசெய்யப்பட்டதே இவ் விவகாரங்களின் இந் நிலைக்கான காரணமாகும். எனினும், சகல கேள்விகளுக்கும் புத்தம்புதிதாக கேள்விகளைக் கோருமாறும், 2014இன் முதலாவது காலாண்டு முடிவதற்கு முன்னர் சகல கொள்வனவை முடிக்குமாறும் பணிப்பாளர்கள் சபை பணித்தது. இதனால் நிதிசார் நிலையின் கூற்றுக்களில் உரித்துரிமையின் கீழ் நடந்துகொண்டிருக்கும் மொத்த வேலையாக ரூபா 14,481,822.55 கொண்ட தொகை காட்டப்பட்டுள்ளது.

33 கையிருப்பு

திறைசேரி உதவுதொகைகளைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் 10,000 லீட்டர்களில் சுமார் 5,800 லீட்டர்கள் தொகையிலான எஞ்சியுள்ள எண்ணெய் விசிறல் இரசாயனம் அவசரகாலமொன்றின் போது பயன்படுத்துவதற்காக பண்டகசாலையில் வைக்கப்பட்டுள்ளது. எனினும், 2012ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு வேளையில் நிதிசார் செயற்பேற்றின் கூற்றில் செலவினமொன்றாக பெறுமதியழிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பேரில், இது 2013ஆம் ஆண்டில் கையிருப்பில் உள்ளடக்கப்பட்டது. இதன் பிரகாரம், செலவினங்களிலிருந்து பெறுமதியழிக்கப்பட்ட பெறுமதி வருமானமொன்றாக சேர்க்கப்பட்டதுடன், பெறுமதிகள் செம்மையாக கணக்கிடப்பட்டன. கையிருப்புச் செலவினங்கள் மற்றும் மூலதன உதவுதொகைகள் கணக்கில் கையிருப்பின் ஆகுசெலவு பதிவுசெய்யப்பட்ட அதேவேளை, பண்டகசாலையில் கையிருப்பின் பெறுமதி கையிருப்பில் பதிவுசெய்யப்பட்டது. நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக கையிருப்பின் பெறுமதி காட்டப்பட்டுள்ளது. அது தொடர்பான சீராக்கல்கள் 01.01.2013இல் உள்ளவாறு திரண்ட மீதியாகச் செய்யப்பட்டுள்ளது.

34 நூலக நூல்கள்

2013ஆம் ஆண்டில் நூலக நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் இலாப, நஷ்டக் கணக்குக்கு கைமாற்றப்பட்டுள்ளது. எனினும், இது நிதிசார் கூற்றுக்களில் சொத்தொன்றாகக் கருதப்பட்டு உள்ளடக்கப்பட வேண்டும் என கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இதன் பிரகாரம், 2012ஆம் ஆண்டில் இலாப, நஷ்ட கணக்குக்கு கைமாற்றப்பட்ட வருமானங்களும் செலவினங்களும் 2013ஆம் ஆண்டில் செம்மையாகக் கணக்கிடப்பட்டுள்ளதுடன், இதற்கு அவசியமான சீராக்கல்கள் 01.01.2013இல் உள்ளவாறு திரண்ட மீதிக்கு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இந் நூல்களின் பெறுமதி 2013ஆம் ஆண்டில் நிதிசார் நிலையின் கூற்றில் நூலக நூல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பின்போடப்பட்ட உதவுதொகைக் கணக்குக்கு ஆகுசெலவு கைமாற்றப்பட்டுள்ளது. இதனால் 2013ஆம் ஆண்டில் இலாப, நஷ்டக் கணக்குக்கு மதிப்பிறக்கங்கள் கைமாற்றப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களினதும், உதவு தொகைகளாகக் கிடைத்த நூல்களினதும் பெறுமதி 2013ஆம் ஆண்டில் மதிப்பாயப்படவில்லை. எனினும், நூல்கள் மீதான உண்மைக் கோவையொன்று தயாரிக்கப்பட்டதுடன், சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவற்றின் ஆகக்கூடுதலான சாத்தியப் பெறுமதியில் இந்நூல்களினதும், காலாந்திரிகளினதும் பெறுமதியை மதிப்பிடுவதற்கும், 2014ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களில் அவற்றை உள்ளடக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

35 தகவல் பலகைகள்

2008ஆம் ஆண்டு முதல் தகவல் பலகைகளை அதிகார சபை நிறுவியுள்ளது. இயற்கையான காரணிகளின் நிமித்தம் இவற்றில் சில பலகைககள் சேதமடைந்த அதேவேளை, ஏனையவை முன்னேற்றச் செயற்பாடுகளினதும் அத்துடன் மனித அல்லது விலங்குகளின் செயற்பாடுகளினதும் காரணமாகும். கடந்த காலக் கணக்குகளின் பிரகாரம், 2008–2012 காலத்தில் தகவல் பலகைகளை நிறுவுவதற்காக ரூபா 7,197,220 செலவழிக்கப்பட்டுள்ளது. 31.12.2013இல் உள்ளவாறு தகவல் பலகைகள் தொடர்பில் தற்போதைய நிலைமை தொடர்பிலான விபரங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர்கள் வழங்கியுள்ளனர். எனினும், நிறுவுகையின் திகதி பற்றியோ அல்லது நடைமுறையிலான தகவல் மீதான அடிப்படையிலான காலம் பற்றியோ முடிவொன்றுக்கு வருவது கஷ்டமானதாகும். அலுவலர்களின் அறிக்கைகள் மீதான அடிப்படையில் தகவல் பலகைகளின் பெறுமதிகள் கணக்கிடப்பட்டன. செயன்முறையிலான கஷ்டங்களின் காரணமாக 2013ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களில் இப்பெறுமதிகள் உள்ளடக்கப்படவில்லை. முதலில் உருப்படியான சரிபார்த்தலை நடத்தி நிதிசார் கூற்றுக்களில் பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு முன்னர் இந்த தகவல் பலகைகளுக்கு இலக்கங்களை வழங்குவதற்கும், அதன் பின்னர் 2014ஆம் ஆண்டில் கூற்றுக்களில் பெறுமதிகளைப் பதிவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

36 இரசாயனங்களினதும், கண்ணாடி உபகரணங்களினதும் பொருட்பட்டியல்

கொள்வனவு ஆண்டின் செலவினத்திற்கு இரசாயனங்களினதும், கண்ணாடி உபகரணங்களினதும் கொள்வனவின் மொத்த ஆகசெலவைப் பெறுமதியழிப்பதே இரசாயனங்களினதும், கண்ணாடி உபகரணங்களினதும் தொடர்பிலான அதிகாரசபையினால் பின்பற்றப்படும் கொள்கையாகும்.

ஆண்டின் இறுதியில் இரசாயனங்களின் கையிருப்புக்களைச் செம்மையாகக் கணக்கிடுவதில் நிலவுகின்ற செயன்முறையிலான கஷ்டமும், மிகவும் குறுகிய காலமொன்றினுள் பயன்பாட்டிலிருந்து கண்ணாடி பண்டங்கள் அகற்றப்படுவதுமே இம்முறையை பயன்படுத்துவதற்கான காரணங்களாகும். எனினும், இரசாயனங்களுக்கும், கண்ணாடி உபகரணங்களுக்கும் திறமான பதிவேடொன்றை ஆய்வுகூடம் பேணுகின்றது.

# 5. *ஆண்டு அறிக்கை 2013*

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்/எல்/எம்சுபீஏ/1/13/28    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2014 நவம்பர் 18

தலைவர்,
கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை.

**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் பாதுகாத்தல் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ)பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2014 மே 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தருகின்றன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் திர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| i. நி.பி 757 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நி.பி 104(i) | அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 17,700 முற்பணத் தொகையை மோசடி செய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நிதி விளைவுகள் ரூபா 2,804,789 பற்றாக்குறையொன்றாக இருந்துடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,814,711 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 990,078 குறைவு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறை 54.56 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதற்காக மொத்த வருமானம் ரூபா 1.17 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 2.16 மில்லியனால் அதிகரித்தமையே பிரதான காரணமாக இருந்தது.

2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக கருதுகையில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் கருத்திற் கொள்ளக்கூடியளவு அதிகரிப்பொன்றை காட்டியிருந்ததுடன், இதற்கு பிரதானமாக காசுமீதி மற்றும் இருப்பு மீதி அதிகரித்தமை தாக்கம் செலுத்தியிருந்தன.

04. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நிதிஏற்பாடு ரூபா 45,000,000 ஆக இருந்தது. இந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மீளாய்வாண்டில் திருத்தப்பட்டிருந்ததுடன், செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூபா 17,094,096 ஆக இருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 46 செயற்பாடுகளில் ரூபா 6,800,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த 02 செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், 10 செயற்பாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 12,440,000 ஆன நிதிஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன. 20 செயற்பாடுகளுக்குரிய ரூபா 21,617,000 ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட

ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 செப்தெம்பர் மாதத்தில் திருத்தப்பட்டிருந்ததுடன், அவ்வேளையில் செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 08 செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகள் குறைக்கப்பட்டு 04 செயற்பாடுகளுக்காக அந்த ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 03 செயற்பாடுகளுக்குரிய ரூபா 14,069,700 தொகையான நிதிஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2012 இன் 01 ஆம் இலக்க எண்ணைக் கசிவு தொடர்பான அவசர திட்டம் துறைமுக அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவசர எண்ணைக் கசிவின் போது நிறுவகம் தொடர்பான பொறுப்பு கடல்சார் சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து விலகிக் காணப்பட்டது. இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆகஸ்ட் 23 அம் திகதிய MV.Thermopylae Sierra கப்பல் மூலம் ஏற்பட்ட எண்ணைக் கசிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சகல செலவினங்களையும் அமைச்சரவையினால் குறித்த கப்பல் உரிமையாளரிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அதற்காக செய்த ரூபா 11,551,133 ஆன முழுச் செலவினமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும், கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் அக்கப்பலினால் ஏற்பட்ட கடல் மாசடைவதற்குரித்தாக இழப்பீட்டை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2010 நவம்பர் 13 ஆந் திகதி கொழும்புத் துறைமுகத்தில் எண்ணைக் கசிவு இடம்பெற்றிருந்த MT Chahat கப்பலில் இருந்து சுற்றாடல் மாசடைந்து 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அதற்குரிய இழப்பீடு அறவிப்பட்டிருக்கவில்லை.

(இ) கடல் மாசடைதலைத் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் 51(4) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் விதிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 02 வர்த்தமானிப் பத்திரங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடல் மாசடைதலைத் தடுத்தலை அறிவூட்டும் நோக்கில் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 6,507,297 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், கடல்சார் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்து வருவதாகவும் இச் செயலமர்வுகளை நடாத்துவதன் மூலம் கடல் மாசடைதலை தடுப்பதற்கு கிடைக்கும் பங்களிப்பு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தவில்லை.

(உ) கப்பல் மூலம் பெலஸ் நீர் ஊடாக புதிய ஆக்கிரமிக்கும் உயிரினங்கள் இலங்கை கடல் வலயத்தில் அறிமுகப்படுத்தல் முகாமைத்திற்கான செயற்திட்டத்தின் மூலம் (Management of Inroduction of Invasive Alien Species into Sri Lanka waters through ship's Ballast water) திட்டத்தில் ஆக்கிரமிக்கும் உயிரினங்களின் வருகையை ஒவ்வொரு துறைமுக மட்டத்தில் மதிப்பீடு செய்வதைத் திட்டமிடல் (Risk of alien invasive species introduction through ballast is assessed in each Commercial port) செயற்பாட்டிற்காக ரூபா 3,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4** பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

அதிகாரசபை நடாத்திச் செல்லப்பட்டு வந்த கட்டிடத்தில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற மாடிகளுக்கு மேலதிகமாக 2013 திசெம்பர் மாதத்திலிருந்து 02 மேலதிக மாடிகள் ரூபா 240,000 இற்கு வாடகைக்கு எடுக்கப்பட்டு 2014 ஏப்ரல் வரை ரூபா 1,200,000 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2014 ஏப்ரல் வரை அந்த 02 மாடிகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 ஏனைய நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

துறைமுகத்திற்கு அண்மித்தாக அடிப்படை தகவல் முறையொன்றை ஏற்படுத்தும் கணிப்பீடொன்றிற்காக ரூபா 873,750 பெறுமதியான நுணுக்குக்காட்டி கெமராவொன்று (Microscope Camera) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் ஆய்வுகூடத்தில் இடவசதிகள் போதாமையால் அக்கணிப்பீட்டிற்காக சமூகமளிக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் குறித்த கெமராவை அப்பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் பதவியணியினர் 183 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 110 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 73 ஆக இருந்தது.

(ஆ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பந்தியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர், பொது முகாமையாளராக இருக்க வேண்டிய போதிலும், நிரந்தரமாக உத்தியோகத்தர் ஒருவரை இதற்காக நியமிக்காமல், முகாமையாளர் (சட்டம்) பெண் உத்தியோகத்தர் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். அத்தோடு சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 07 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டமை அதிகாரசபையின் நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்தன.

(இ) உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பின் போது கல்வித் தகைமைகளின் சரியான தன்மையை உரிய நிறுவனங்களில் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடு), செயலாளர், உதவி முகாமையாளர், திட்டமிடல் மற்றும் உதவி முகாமையாளர், சட்டம் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பத்திரிகை விளம்பரத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 303,744 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த ஆட்சேர்ப்பு 2014 ஆகஸ்ட் வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றாமை

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் 51(1) அம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 07 கட்டளைகள் தொடர்பாக வரைவுச் சட்டம் மற்றும் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு கடல் மாசடைதலைத் குறைப்பதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) மீன்பிடித் துறைமுகங்களில் காணப்படுகின்ற கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான நடைமுறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடல் எல்லிலையிலிருந்து 300 மீற்றர் வரையான தரைப்பகுதி எல்லையில் கடலுக்கு கழிவுப்பொருட்களை வெளியேற்றும் முறையில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்யாமல் கடலுக்கு அனுப்புதல் தொடர்பாக உள்ளுராட்சி மன்ற நிறுவகங்களை அறிவூட்டுவதற்கும் மீள்சுழற்சி செய்யாமல் கடலுக்குள் விடப்படும் கழிவுப் பொருள் தொடர்பாக சுற்றுலா கைத்தொழிலுக்கு விசேட தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமாகையால் அச்சிக்கல்கள் தொடர்பாக சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து எதிர்காலத்தில் செயற்படக் கூடிய முறை தொடர்பாக அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆய்வுகூட நடவடிக்கைகளை திருப்திகரமாகவும் வினைத்திறனாகவும் பேணிச் செல்வதற்காக தற்போது அதற்காக உள்ள பரிசோதனைகளை விரிவுபடுத்தவும் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படும் மொத்த பரிசோதனைகளின் அறிக்கையொன்றை (Feacal Colifoam, Total Colifoam போன்றவற்றை உள்ளடக்கி) தயாரிப்பதற்கு தாமதமாகியிருந்தது.

## 5.3 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

கடல் மாசடைதல் தடுத்தல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கடல்சார் சுற்றாடல் சபையை தாபிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்
(இ) செயற்திட்ட நிர்வாகம்
(ஈ) திட்டங்களைத் தயாரித்தலும் செயற்படுத்தலும்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி